**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண். 61/2020 வா.சா. 1**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 25–ம் நாள் வியாழக்கிழமை–ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: கமலவேணி தந்தை பெயர்: பழனிச்சாமி

---

**25.06.2026.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ –40 வரையான ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு பின்னர் ஏற்பட்ட ஆவணங்கள் என்றும் தாவாச் சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்பதால் வாதியின் வழக்கை நிரூபணம் செய்வதற்கு உகந்த ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் 1967ம் வருடம் பிறந்தேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. எனது அப்பா பிரதிவாதி சேக்கு நாங்கள் குடியிருக்கும் தாவா வீட்டில் அத்துமீறி நுழைந்து இடைஞ்சல் செய்வதாக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீடு 1981ம் வருடம் கட்டப்பட்டது என்றால் சரிதான். எங்கள் ஊரில் கோவில் வீட்டருகே எங்களது பூர்வீக வீடு இருந்து இடிந்து விட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி இடம் சராசரியாக 1 செண்டு இருக்கும். மேற்படி வீடு எப்போது இடிந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வீட்டின் பட்டா எண் 68 என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். எனது தகப்பனார் போட்ட வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கிற்கான விவரங்கள் எனக்கு தெரியாது . எனது கணவருக்கு தான் தெரியும். எனது கணவர்க்கு எனது அப்பா தாய்மாமா என்பதால் அவருக்கு தெரியும்.

4. நான், சிவஞானம், அங்கயற்கண்ணி ஆகியோர்களின் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன். தாவாச் சொத்தின் பட்டா எண் 2172, சர்வே எண் 277/21 , வீட்டு கதவு எண் 782/7/91, சமையல் கூட கதவு எண் 616/7/95B வழக்குச் சொத்துக்கள் என்றால் சரிதான். பழனிம்மாளின் தார்ச் வீடு கதவு எண் 783/7/92 என்றால் சரிதான். 5. கூடுதல்

எதிர் வழக்குரையில் கண்ட வம்சாவழி ஜாபிதா சரிதான். தாவாச்சொத்து பூர்வீக சொத்து என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். மேற்படி பூர்வீக சொத்து அழகு அம்பலம் மகன் இராமசாமிக்கு பாத்தியபட்டு சேவூகனுக்கு கிடைத்தது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமசாமியிடமிருந்து சேவூகனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கை எனது தந்தை தாக்கல் செய்ததால் ஆவணங்கள் தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது.

6. 01.01.1983 ம் தேதியிட்ட பாகஆவணத்தின் படி பூர்வீக சொத்துக்கள் 3 பங்காக பிரிக்கப்பட்டது என்பதை ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றால் தெரியாது. 04.07.1983 ம் தேதியிட்ட பதிவு பாகப்பத்திரம் மூலம் எனது அப்பாவிற்கும், சேக்குவின் அப்பா சேதுராமனுக்கும் இடையே பாகம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பதிவு பாகப்பத்தரத்தில் தாவாச்சொத்தின் சர்வே எண் கட்டுபடவில்லை என்றால் சரிதான். அழகு இறந்தது சுமார் 1983 ம் வருடமாக இருக்கலாம்.

7. சேக்கு பிரச்சனை செய்ததால் ஊர் பஞ்சாயத்தில் பேசப்பட்டு, சொத்து சம்மந்தமாக சேக்குவிடம் எழுதிவாங்கினோம் என்று வழக்குரையில் கூறப்பட்டது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. அ.வ எண் 126/2009 வழக்கில் எனது தந்தை தரப்பினரை இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கை சேக்கு திரும்ப பெற்று கொண்டார் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு தொடர்ச்சியாக ஏற்பட்ட குற்ற வழக்கில் CC–184/2009 சேக்கு விடுதலை செய்யப்பட்டார் என்றால் தெரியும். மேற்படி CC–184/2009 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை **பி.வா.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. பிரதிவாதி சேக்குவிற்கு தாவாச் சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று பிராதில் சொல்லிவிட்டு வா.சா.ஆ–10 கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தை பூர்வீக சொத் து என்று சொல்லிவிட்டு வா.சா.ஆ–8 ஆவணமாக பதிவு செய்யப்படாத உயிலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9. தாவா இடத்தை பிரதிவாதி சேக்குவின் தகப்பனார் அழகு என்ற பழனிச்சாமி மகன் இராமசாமியிடன் சரியான பிரதி பிரயோ ஜனதிற்கு வாய்மொழியாக கிரையம் பெற்று பின்பு அவ்விடத்தில் சேக்கு வீட்டை கட்டினார் என்றாலும், பழனிம்மாள்

கணவர் இறந்துவிட்டதால் அவரை தாவா வீட்டில் தங்க அனுமதித்தார் என்றாலும் லட்சுமணனும் மேற்படி வீட்டில் தங்கினார் என்றாலும், பின்னர் பழனிம்மாளும், லட்சுமணனும் இணைந்து செல்லதகாக ஆவணங்களை உருவாக்கி கொண்டனர் என்றால் சரியல்ல.

10. கோவில் வீடு அருகில் இருந்த பூர்வீக வீடு தான் பாகத்திற்குரிய வீடு என்றாலும், தாவா வீடு என்பது சேக்குவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிரச்சனைகள் அதிகரிக்கவே சேக்கு 09.04.2009 ம்தேதி தாவா வீடு அமைந்துள்ள இடத்தின் உண்மையான உரிமையாளரான அழகு என்ற பழனிச்சாமி அம்பலம் மகன் இராமசாமியிடம் பதிவு கிரையம் பெற்றுள்ளார் என்ற வகையில் தாவா இடமும், வீடும் பிரதிவாதி சேக்குவிற்கு பாத்தியமானது என்றால் சரியல்ல.

11. தாவா வழக்கில் காட்டப்பட்டுள்ள நான்குமால் தவறானது என்றால் சரியல்ல. கிழக்கே நடைபாதை , மேற்கே காளிநாடார் தோப்பு என்றால் தற்சமயம் நாங்கள் கிரையம் பெற்று விட்டோம். வடக்கிலும், தெற்கிலும் சேவுகன் வகையறா என்றால் சரியல்ல.